**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 16.02.2026**

**OS.164/2023**

**வா.சா.1 திரு.தங்கமணி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். கவியரசு என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் இன்ஜினியராக உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் என்ன தொழில்செய்கிறேன் என்றும், கவியரசு என்ன தொழில் செய்கிறார் என்றும் குறிப்பாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். கவியரசு என்பவர் வாணியம்பாடியில் உள்ள வித்யாவிகாஷ் பள்ளியில் பங்குதாரராக உள்ளார் அதே பள்ளியில் பங்குதாராக உள்ள திருப்பதி கவுண்டர் என்பவரும் பங்குதாரராக உள்ளார், அந்த திருப்பதி கவுண்டர் எனக்கு பழக்கமானவர் அவர் மூலமாக தான் கவியரசை எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் கவியரசு எனக்கு எவ்வாறு பழக்கம் என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். கவியரசு எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் 2022 மார்ச் மாதம், 16, 17 தேதிபோல் நான் திருப்பதி கவுண்டரை பார்க்க வித்யவிகாஷ் பள்ளிக்கு செல்லும்போது கவியரசு என்னிடம் பணம் கேட்டார். திருப்பதிகவுண்டர் மூலமாக தான் கவியரசுவை பழக்கம் என்று சொல்லும்போது அந்த திருப்பதி கவுண்டரை வைத்துக்கொண்டுதான் நான் கவியரசுக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. ரூபாய் 7 இலட்சம் என்பது பெரிய தொகை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு 7 இலட்சம் நான் பணம் கொடுக்கும்போது திருப்பதி கவுண்டரையோ அல்லது வேறு முக்கிய நபரை வைத்துக்கொண்டு நான் பணம் கொடுத்திருக்கலாம் என்றால் கவியரசு 7, 8 வருடமாக நன்கு பழக்கமானவர் அதனால் அவர் பணம் கேட்டதால் நான் கொடுத்தேன்.

அருளாளன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் வாணியம்பாடியில் உள்ள வித்யாவிகாஷ் பள்ளியில் Pricipal –ஐ போல வேலை செய்தார். நான் மேற்படி அருளாளன் மீது அரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஈஸ்வர மூர்த்தி என்பவர் யார் என்றால் அவரை எனக்கு தெரியும், அவர் அரூர் தண்டகுப்பம் பகுதியை சேர்ந்தவர். அந்த ஈஸ்வரமூர்த்தியும் அருளாளன் மீது ஒரு காசோலை வழக்கு அரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி ஈஸ்வரமூர்த்தியும் நானும், மேற்படி பள்ளிக்கு சென்று அருளாளனிடம் பணம் திருப்பி கேட்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு ஒருமுறை நான் பணம் திருப்பி கேட்கப்போனபோது பணம் கொடுக்கவில்லை என்றால் பள்ளி பேருந்தை எடுத்துச்சென்றுவிடுவதாக சொன்னேன் என்றால் இல்லை. நான், ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, கவியரசு பதிலே எதுவும் போடவில்லை.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.16 17:24:42 +0530